# எட்டுத்தொகை நூல்களில் இறைச்சிந்தனைகள்

# Religious Thought in the Ettuthokai Texts

*முனைவர் மு. செல்வக்குமார்*
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*தியாகராசர் கல்லூரி, மதுரை*
தமிழ்நாடு, இந்தியா

**Dr. M. Selvakumar**
*Assistant Professor, Department of Tamil*
*Thiagajar College, Madurai*
*Tamil Nadu, India*

**Citation**: Selvakumar, M. "Religious Thought in the Ettuthokai Texts." *Journal of Tamil Culture and Literature*, vol. 5, no. 2, 2025, pp. 26-33.
**DOI**: *https://doi.org/10.5281/zenodo.19762078*

**ஆய்வுச் சுருக்கம்**
*சங்ககால மக்கள் பல்வேறு வகையான வழிபாட்டு முறைகளைப் பின்பற்றி வாழ்ந்து வந்துள்ளனர். நானிலத்திலும் தெய்வ வழிபாடுகள் நல்லொழுக்கத்துடன் வாழ்வதற்கு வழிவகை செய்துள்ளன. வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு வழபாடே தீர்வு எனவும் கருதினர். விரிச்சிகேட்டல் என்பது சங்க இலக்கியங்களில் பெரும்பங்கினை˙ பெற்றுள்ளன. மேலும் இயற்கையை வழிபட்டு வாழ்ந்து வந்தனர். மர வழிபாடு, நடுகல் வழிபாடு, கடற் தெய்வ வழிபாடு போன்றவை முக்கிய பங்கினை ஆற்றியுள்ளன. சங்ககால மக்கள் இறையுணர்வால் திருவிழாக்களை எடுத்துள்ளனர். ஒவ்வொரு நிலத்திற்கும் தெய்வங்களை முறைப்படுத்தி வைத்திருந்தனர். நம்பிக்கைகளையும் சடங்குகளையும் முன்வைத்தனர். அவற்றை எட்டுத்தொகை நூல்களில் விரவிருப்பதை இகக்கட்டுரை ஆய்வு செய்கிறது.*
***கலைச்சொற்கள்:*** *இறை, சிந்தனை, வழிபாடு, நம்பிக்கை, திருவிழா, சடங்குகள், தெய்வம், நானிலம், நடுகல், விருச்சி கேட்டல், சகுனம், வேலவன் வெறியாட்டு, குரவைக்கூத்து*

## Abstract
*The people of the Sangam period followed various forms of worship. The worship of deities in nature contributed to living a virtuous life. They believed that rituals were the solution to the problems faced in life. Virichikettal (a ritual or practice) plays a significant role in Sangam literature. Additionally, they lived by worshipping nature. Rituals like tree worship, stone worship, and sea deity worship played an important role. The people of the Sangam period celebrated festivals due to their divine consciousness. They organized deities for each land and established proper rituals for them. They introduced beliefs and customs, which are found elaborated in the EttuThogai (the Eight Anthologies) texts. This paper explores their practices in this context.*
***Keywords****: God, Thought, Worship, Belief, Festival, Rituals, Deity, Nature, Stone, Viruchchikettal, Sakuna, Velavan and Veriyattu, Kuravaikku.*

## தோற்றுவாய்

*சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் பல்வேறு வழிபாடுகளை மேற்கொண்டிருந்தனர். இயற்கையைத் தெய்வமாகப் போற்றி மரவழிபாடு செய்தனர். போர் வீரர்களுக்கு நடுகல் வழிபாடும் மற்றும் நானிலத்தெய்வ வழிபாடுகளும் பெருந்தெய்வங்களின் வழிபாடுகளும் செய்து இறைச்சிந்தனைகளோடு கூடிய நல்லொழுக்கத்துடன் வாழ்ந்துள்ளனர் என்பது சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை நூல்களின் வழி அறியப்படுகிறது. தங்களுக்கு*

*ஏற்படும் பிரச்சனைகளையும் குறைகளையும் நீக்குமாறு வேண்டி விழா எடுத்தனர். அவற்றுள் இந்திரவிழா குறிப்பிடத்தக்கதாகும். விரிச்சிகேட்டல், சகுனம் பார்த்தல், வேலவன் வெறியாடல் குரவைக்கூத்து, முதலிய இறை நம்பிக்கை தொடர்பான பழக்கவழக்கங்களை மேற்கொண்டிருந்தனர் என்பதைப் பற்றி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**இயற்கை வழிபாடு**

*சங்கப்புலவர்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்தினர். இயற்கை அழகை, இரசித்து ஆராய்ந்தனர். இயற்கையே, இறைவன் என வழிபட்டனர். பஞ்சபூதங்களான மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவற்றை வழிபட்டனர் நீலத்திரைக்கடலில் தோன்றிய கதிரவனின் காட்சி, தமிழர்களின் உள்ளத்தைக் கவர்ந்தது. இக்காட்சியை மயில்மீதுள்ள செவ்வேளையுடைய முருகப்பெருமான் போல் உள்ளதாக வருணித்துள்ளனர்.*

***உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு***
***பலர்புகழ் ஞாயிறு கடல்கண்டாங்கு***
***ஓஅற இமைக்கும் சேண்விளங்கு அவிர் ஒளி (திருமுருகாற்றுப்படை 1;1-3)***

*என்று கூறப்பட்டுள்ளது.*

*மாலை அந்தியில் செவ்வானத்திலேயே வரிசையாகக் கொக்கினம் பறந்து செல்லும் காட்சி செந்நிற முருகன் மார்பில் அணிந்துள்ள முத்துமாலையை நினைவுப்படுத்துகிறது. இதனை,*

***நெடுவோன் மார்பின் ஆரம் போலச்***
***செவ்வாய் வானம் தீண்டிமீன் அருந்தும்***
***பைங்காற் கொக்கினம் நிறைபறை உகப்ப (அகநானூறு 120;1-3)***

*என்று நக்கீரர் பாடியுள்ளர்.*

*எல்லா உயிர்க்கும் இன்பம் பொதுவாயினும் சிறந்த இன்பம் எது என அறிந்து, துய்த்தல், அஃறிணையுயிர்கட்கன்றி உயர்திணை உயிர்கட்கே இயல்வதாகும். ஆகவே மக்களினமே ஆராய்ந்தறிந்து அவா நீக்கி, இடையயறா இன்பம் நல்கும் பேரா இயற்கையைப் பெற முடியும்.*

***ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே***
***பேரா இயற்கை தரும் (திருக்குறள் 370)***

*என்று திருவள்ளுவரும் கூறியுள்ளார். வாழ்வியல் முறையையும். பொய்தீர் ஒழுக்க நெறியையும் பின்பற்றி வாழ்வதே சிறந்தது அந்நெறியுடன் சில சடங்கு முறைகளையும் சேர்த்துப்பின்னர் சமய வழிமுறையினையும் அமைத்துக்கொண்டனர். மக்கள் தொடக்கக் காலத்திலே நிலநடுக்கம், வெள்ளம், தீ. புயற்காற்று, இடி மின்னல் முதலியவற்றால் வரும் இடையூறுகளைக்கண்டு அஞ்சினர். அவற்றின் துன்பங்களிலிருந்து விடுபட இயற்கையை வழிபடத் தொடங்கினர். அவ்வழிபாடு காலப்போக்கில் அன்புவழிபாடாக மாறியது என்பது அறியப்படுகிறது. இதனை, பதிற்றுப்பத்து கடவுள் வாழ்த்துப் பாடலின் வழியே அறியலாம்.*

***எரியெள்ளு வன்ன நிறத்தன் விரியிணர்க்***
***கொன்றையம் பைந்தா ரகலகத்தன் பொன்றார்***

***(பதிற்றுப்பத்து கடவுள் வாழ்த்துப் பாடல்)***

*மேலும் இளம்பிறை சேர்ந்த நுதலின் களங்கனி என்றும் இயற்கையோடு சிவபெருமானை இணைத்து போற்றியுள்ளனர்.*

***நீலமேனி வாலிழை பாகத்***

***தொருவ னிருதா ணிழற்கீழ்***
***மூவகை யுகை மகிழ்ந்தன முறையே (ஐங்குறுநூறு கடவுள் வாழ்த்து பாடல்)***

*என்று ஐங்குறுநூறு கூறுகின்றது. நீலமேனியுடைய இறைவனாகிய சிவபெருமானின் திருவடியில் தஞ்சமென மூவகை உலகங்களில் உள்ள ஆன்மாக்களும் சேர்கின்றன என்பது பொருளாகும். ஆகாயமும் நீலநிறத்தில் உள்ளது. ஆகாயத்தின் சூட்சும வடிவமாக சிவபெருமான் நடராசராக ஐந்தொழிலையும் செய்துவருகின்றார் என்பது அறியப்படுகிறது.*

**இயற்கை நுண்ணறிவு**

*சங்கப்புலவர்கள் இயற்யையோடு ஒன்றி வாழந்ததால் அனைத்துயிர்களின் இயல்பையும் நன்கு அறிந்திருந்தனர். ஒரு பொருளைப் பற்றி பாடும்போது அதனோடு ஒப்புமையுடைய பிறிதொரு பொருள் இயல்பாக அவர்களின் எண்ணத்தில் தோன்றியது. இதனை அகநானூற்றில்*

***சூர்மருங் கருத்த சுடரிலை நெடுவேல்***
***சினமிகு முருகன் தண்பரங்குன்றத்து***
***அந்துவன் பாடிய சந்துகெழு நெடுவரை (59;10-12)***

*என்று பாடப்பட்டுள்ளது. முருகப்பெருமானின் சிறப்புகளும் அவரின் வேலின் சிறப்பும் புகழ்ந்துரைக்கப்பட்டுள்ளன.*

**மரவழிபாடு**

*உலகின் பல்வேறு நாடுகளிலும் தொடக்கத்தில் மரங்களையே தெய்வமாகக் கருதி வழிபட்டனர். தமிழ்நாட்டிலும் இம்மரவழிபாடு தொன்றுதொட்டு பேய், பிசாசு மரங்களில் உறைவதாகக் கருதி மக்கள் அஞ்சினர். எனவே அவற்றுக்குப் பலி கொடுத்து வணங்கினால் தீமைகள் நீங்கும் என்றும், நம்பிக்கை கொண்டிருந்தனர். மரத்தடியில் கந்து (தூண்) இலிங்கம் முதலியவற்றை வைத்து வழிபடும் வழக்கம் தோன்றியது. கோயில்கள் கட்டிய போது மரங்களை நடுவில் அமைத்தே கட்டினர். அம்மரங்கள் பின் தலவிருட்சம் என்று போற்றப்பட்டன.*

*பாணன் ஒருவன் புலவனைக் காணச் செல்லும் முன் வழியிலுள்ள கள்ளி நிழற்கடவுளை வணங்கிச் சென்றான். இதனை, புறநானூறு*

***கள்ளி நீழற் கடவுள் வாழ்த்திப்***
***பசிபடு மருங்குலை கசிபு கைதொழாஅக்***
***காணலென் கொல்லென வினவினை உரூஉம் (புறநானூறு 260;5-7)***

*மேலும், பனை, ஆல், கடம்பு போன்ற மரங்களிலும், கடவுள் உறைவதாக எண்ணிப் பலிகொடுத்து வழிபட்டுள்ளனர். பனை மரத்தைப் பற்றி*

***தொன்றுறை கடவுள் சேர்ந்த பராரை***
***மன்றப் பெண்ணை வாங்கு மடற்குடம்பைத் (நற்றிணை 303;3-4)***

*என்ற பனையின் கீழ் உறையும் கடவுள் நம்மைக் காப்பார் என்று நற்றிணையில் பாடப்பட்டுள்ளது. கடவுள் மராத்த என்று அகநானூறும் பாடியுள்ளது. மன்றத்திலிருக்கும் கடம்ப மரத்திலுள்ள அச்சந்தரும் கடவுள் கொடியவர்களை ஒறுத்தழிக்கும் என்னும் நம்பிக்கையும் மக்களிடம் இருந்தது. இதனை, குறுந்தொகை*

***மன்றமராஅத்த பேஎமுதிர் கடவுள்***
***கொடியோர்த் தெறூஉம் என்ப யாவதும் (குறுந்தொகை 87;1-2)***

*என்று கூறுகிறது. மேலும், ஆலமர் செல்வர் - தட்சிணாமூர்த்தி கானமர் செல்வி - கொற்றவை*

*என்பனவும் மரவழிபாட்டயே குறிக்கிறது.*

**நடுகல் வழிபாடு**

*போரில் மாய்ந்த மறவர்களைப் பெரிதும், மதித்து அவர்களின் பெயரையும், மறச் செயல்களையும் கல்லிற் பொறித்து நட்டு, மாலை சூட்டிப் படையலிட்டு மக்கள் வழிபட்டனர். இந்நடுகல் வழிபாட்டினை, ஆறுவகையாக தொல்காப்பியம் பகுத்துக்கூறும். அதனை,*

***காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல் (தொல்காப்பியம் புறத்திணையியல் 5)***

*என்று பாடியுள்ளது.*

***ஊர்நனி யிறந்த பார்முதிர் பறந்தலை***
***ஓங்குநிலை வேங்கை ஒள்ளினர் நறுவீப்***
***போந்தை அம்தோட்டின் புணர்ந்தனக் கொடுத்துப்***
***பல்ஆன் கோவலர் படலைசூட்டக் கல்ஆயினையே (புறநானூறு 265;1-4)***

*என்று பாடியுள்ளது.*

***நடுகற் பீலிசூட்டி நாரரி***
***சிறுகலத்து உகுப்பவும் கொள்வான் கொல்லொ***
***கோடு உயர் பிறங்குமலை கெழீஇய***
***நாடு உடன் கொடுப்பவும் கொள்ளா தோனே? (புறநானூறு 232;3-6)***

*என்று புறநானூற்றுப் பாடல்வழி அறியப்படுகிறது.*

**நானிலத் தெய்வங்களின் வழிபாடு**

**குறிஞ்சி - முருகன்**

*மலையும் மலையைச் சார்ந்த பகுதியே குறிஞ்சியாகும். இதன் தெய்வம் முருகபெருமான் ஆவார்.*

***சூர்மருங்கு அறுத்த சுடரினயை நெடுவேல் (அகநானூறு 59;10)***
***சூர்மருங்கு அறுத்த சுடர்ப்படையோயே(பரிபாடல்-14;18)***

**முல்லை - திருமால்**

*காடும் காட்டைச் சார்ந்த பகுதியே முல்லை நிலமாகும். இதன் தெய்வம் திருமால் ஆவார். திருமால் பன்றியுருவம் கொண்டு தன் கோட்டினால் உலகினை ஊழி வெள்ளத்தினின்றும் கொணர்ந்தார். அவ்வூழிக் காலத்தை வராககற்பம் என்று அழைத்தனர். இதனை,*

***ஊழியாழிக்கண் இருநில முருகெழு***
***கேழலாய் மருப்பி னுழுதோய் எனவும் (பரிபாடல் 3;23-24)***

*என்று பரிபாடலின் பாடல்வழி அறியப்படுகிறது.*

*விட்டுணு என்னும் வடசொல்லுக்கு எங்கும் நிறைந்தவர் என பொருளாகும்.*

***தீயினுள் தெறல் நீ, பூவினுள் நாற்றம் நீ***
***கல்லினுள் மணியும் நீ, சொல்லினுள் வாய்மை நீ***
***அறத்தினுள் அன்பு நீ,மறத்தினுள் மைந்து நீ***
***வேதத்து மறை நீ,புதத்து முதலும் நீ***
***வெஞ்சுடர் ஒளியும் நீ,திங்களுள் அழியும் நீ***
***அனைத்தும் நீ, அனைத்தினுள் பொருளும் நீ (பரிபாடல் 3;63-68)***

*என்று இயம்புகிறது. மேலும், திருமாலின் பெருமைகளை*

***மாநிலஞ் சேவடி யாகத் தூநீர்***

***வளைநரல் பௌவம் உடுக்கை யாக***
***விசும்புமெய் யாகத் திசைகை யாக***
***பசுங்கதிர் மதியமொடு சுடர்க்கண் ணாக***
***இயன்ற எல்லாம் பயின்றகத் தடங்கிய***
***வேத முதல்வன் என்ப***
***தீதற விளங்கிய திகிரி யோனே (நற்றிணை கடவுள் பாடல்)***

*என நற்றிணை கூறுகிறது.*

**மருதம்- இந்திரன்**

*வயலும் வயலைச்சார்ந்த பகுதியும் மருதம் என்றழைக்கப்பட்டது. மழைவளம் வேண்டி இந்திரனுக்கு இந்திரவிழா எடுத்து, இம்மருதத்தில் மக்கள் வணங்குவர்.*

***தையில் நீராடிய தவந்தலைப் படுவாயோ? (கலித்தொகை 59;13)***

*என்பதில் புதுப்புனல் விழா தைத்திங்களில் நடைபெற்றது. அத் தைந் நீராடலில் பங்கு கொண்டோர் விரும்பிய பேறு பெறுவார் என்றும் குறிஞ்சிக் கலியில் கூறப்பட்டுள்ளது.*

**நெய்தல் - வருணன்**

*கடலும் கடலைச் சார்ந்த பகுதியும் நெய்தல் எனப்படும். நெய்தல் நிலமக்களாகிய பரதவர்கள் சுறாமீனின் கொம்மைக் கடற்கரை மணலில் நட்டு வழிபாடு செய்னதர்.*

**பாலை கொற்றவை**

*பாலை நில மக்கள் கொற்றவையை வழிபட்டுள்ளனர். கொற்றவை என்னும் சொல்லுக்கு வெற்றி என்று பொருள். வெற்றியைத் தருவதற்காக சக்தியை வழிபடுவர். கொற்றவைக்கு வீரர்கள் உயிர்பலியும், குருதிப் பலியையும் இட்டு வணங்கினர். இதனை,*

***ஓங்குபுகழ்***
***கானமர் செல்வி அருளலின் (அகநானூறு 345,3-4)***

*என்னும் அகநானூற்றுப்பாடல் வழி அறியப்படுகிறது.*

**வேலன் வெறியாடல்**

*தலைவிக்கு ஏற்பட்ட குறையை இன்னதென்ன அறியாத நிலையில் தெய்வத்திற்குச் செய்ய வேண்டிய சிறப்பு செய்யாமையால் ஏற்பட்டதெனப் பண்டைத்தமிழ் மக்கள், வேலனைக் கட்டுவிச்சி பார்க்கச் செய்வர். இதனை,*

***குன்ற நாடன் பிரிவிற் சென்று***
***நன்னுதல் பரந்த பசலை கண்டு அன்னை***
***செம்முது பெண்டிரொடு நெல்முன் நீறிஇ***
***கட்டின் கேட்கும் ஆயின் வெற்பில் (நற்றிணை 288;4-7)***

*என்னும் நற்றிணை பாடல்வழி அறியப்படுகிறது.*

**குரவைக்கூத்து**

*ஆயர் குல ஆடவர் ஏற்றைத்தழுவி அவருடைய வெற்றியைப் பாராட்ட, தம்மரபுப்படி தெய்வத்தைத் தொழுது ஆயருடன் கூடி குரவைக் கூத்தாடி மகிழ்வர். இதனை,*

***குரவை தழீஇயாம் மரபுளிபாடித்***

***தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும் (கலித்தொகை 103;75-76)***

*என்றும்*

***தொழீஇ ஒருக்குநா மாடுஞ் குரவையுள் (கலித்தொகை 104;69)***

*என்னும் அடிகளால் குரவைக்கூத்து, ஆடும் வழக்கத்தைப் பற்றி அறியமுடிகிறது.*

**திருவிழாக்கள்**

*சங்க காலத் தமிழர் இறையுணர்வு மிகுதியால் தெய்வத் திருவிழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடினர். ஆண்டுவிழாக்கள் சாறு எனப்படும். ஊருக்கு அழகு திருவிழாக்கள் தொடர்ந்து நடைபெறுவதல் வேண்டும் என எண்ணினர். ஊரைச் சிறப்பித்து விழவு மேம்பாட்ட பழவிறல் மூதூர் என்றும்.*

***விழவு அறுபு அறியா முழவிமிழ் மூதூர் (பதிற்றுப்பத்து-இரண்டாம்பத்து)***

*திருவோண நாளில் மாயோனுக்கும், ஆதிரை நாளில் சிவனுக்கும் விழா நடந்தன. திருவிழாவைப் பற்றி,*

***தெய்வ விழவும் திருந்து விரந்தயர்வும்***
***அவ்வெள் எருவி அரணிபரங் குன்றிற்குகம்***
***தொய்யா வழுச்சீர் வளம்கெழு வையைக்கும்***
***கொய் உளைமான் தேர்க்கொடித் தேரான்கூடற்குகும்***
***கையூழ் தடுமாற்றம் நன்று (பரிபாடல் 17;42-46)***

*என்றும் பரிபாடலில் வழி பரங்குன்றில் மகளிர் நடத்தும் தெய்வ விழாவும், வளங்கெழு வையையிடத்தும் பாண்டியனது மதுரையிடத்தும் அம்மகளிர் செய்யும் விருந்தயர்வும் காரணகாரியமாக தம்முன் மாறிவருதல் அம்மக்களின் இல்லற ஒழுக்கமாக இருந்தன. இறை என்பதற்கு உலகத்திலுள்ள அனைத்து பொருள்களிடத்தும் நீக்கமற நிறைந்த ஒளிர்பவன் என்பது பொருள். கடவுள்=கட+உள் மனத்தின் உள்ளே கடந்து சென்றால் ஆத்மஒளியாக இருப்பவரே கடவுளாவார். இயவுள் என்றால் உயிர்க்கு உயிராய் நின்று இயக்குபவன் என்று பொருள். ஆகவே இத்தகைய பெருமைகளையுடைய கடவுளுக்குத் திருவிழாக்கள் நடத்துவது இன்றியமையாததாகிறது.*

**குலக்குறி வழிபாடு**

*பண்டைய புராதன மக்களின் வழிபாட்டில் ஒன்று குலக்குறி வழிபாடு ஆகும். தங்களைக் காக்கும் விலங்கும் மற்றும் மரம் போன்றவற்றைத் தொடக்கக்கால இனக்குழு மக்கள் தங்கள் குலத்தின் சின்னமாகக் கொண்டனர். சக்தி மிக்க சில விலங்குகளோடு தாங்கள் தொடர்புடையவர்களால் தங்களுக்கு வேட்டையாடும் சக்தி மிகுதிப்படும் என்று நம்பினர். சில குழுக்கள் கரடி, புலி, சிங்கம், யானை முதலியனவற்றிலிருந்து தாங்கள் தோன்றியவர்கள் என்று நம்பினார்கள். ஒரு விலங்கைக் கொல்லாமல் விட்டுவிட்டால் அது வேட்டையில் துணை செய்யும் என்று நம்பினார்கள். இவ்வழிபாடு சங்க காலம் வரையில் பிரதிபலித்தது.*

***ஆயிரம் விரித்த அணங்குடை அருந்தலை***
***தீ உமிழ் திறலொடு முடிமிசை அணவர***
***மாயுடை மலர் மார்பின் (பரிபாடல் 1;1-3)***

*பாம்புகளை தெய்வமாக வணங்கியதனை இப்பாடல் சான்று காட்டுகிறது. பாம்பு குலக்குறியாக வணங்கப்பட்ட பின்னரே சிவன், திருமால் போன்ற தெங்வங்களுடன் இணைந்து வணங்கப்பட்டன என்று அறியப்பட்டது. பூக்களும், மரங்களும் குலக்குறியாக*

*அமைத்தும் மக்கள் வழிபட்டனர். பாண்டியரின் குலக்குறியாக வேம்பு திகழ்கிறது.*

***மூதூர் வாயில் பனிக்கயம் மண்ணி***
***மன்ற வேம்பின் ஒண்குகுழை மிலைந்து***
***தெண்கினை முன்னர்க் களிற்றின் இயலி***
***வெம்போர்ச் செழியனும் வந்தனன் (புறநானூறு 79;1-4)***

*வேம்பின் தளிரைச்சூடிய நெடுஞ்செழியனைக் குறித்த இப்பாடலின் வேம்பு குலக்குறியாக விளங்கியதனைக் காட்டுகிறது. இன்றைய காலத்திலும் வேம்பு மரம் சிறுதெய்வ வழிபாட்டிலும் சிறந்ததாக விளங்குகிறது.*

**கடற்தெய்வ வழிபாடு**

*நெய்தல் நில மக்கள் கடலில் மீன்பிடித்தும், உப்பு விளைவித்தும், முத்தும், பவழமுங் குளி'த்தும், நீர் வாணிகஞ் செய்தும், கடலிலேயே வாழ்ந்ததனால் தம் தெய்வத்தைக் கடல் தெய்வமாகவே கொண்டு வந்தனர்.*

***பெருங் கடற்தெய்வம் நீர் நோக்கிகத் தெளித்துஎன்***
***திருந்து இழைமென் தோள்மணந்தவன் செய்த***
***அருந்துயர் நீக்குவேன் போல் மன் (கலித்தொகை131;1-3)***

*நீரை உடைய பெரிய கடலாகிய தெய்வத்தை மக்கள் வழிபட்டச் செய்தியினை இப்பாடல்வழி அறியமுடிகிறது.*

**முடிவுரை**

*எட்டுத்தொகை நூல்களில் இறைச்சிந்தனைகள் என்னும் இக்கட்டுரையின் வாயிலாகப் பழங்கால மக்களின் இறைச்சிந்தனைகள், நம்பிக்கைகள், வீரர்களுக்கு வணக்கம் தெரிவித்தல், வெற்றிக்கான வழிபாடு போன்றவை அறியப்படுகின்றன.*

**துணை நூற்பட்டியல்**


1. *ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), புறநானூறு, தமிழ்மண் அறக்கட்டளை பெரியார் குடில் பி.11. குல்மொகர் குடியிருப்பு, செவாலியே சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர், சென்னை-600017. முதற்பதிப்பு-2008.*
2. *ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), நற்றிணை, தமிழ்மண் அறக்கட்டளை பெரியார் குடில் பி.11.குல்மொகர் குடியிருப்பு, செவாலியே சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர், சென்னை-600017. முதற்பதிப்பு-2008.*
3. *பேராசிரியர் ம.வே. பசுபதி (ப.ஆ), செம்மொழித் தமிழ் இலக்கண இலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை. முதற்பதிப்பு-2010*
4. *ஔவை சு.துரைசாமிப்பிள்ளை (உ.ஆ), பதிற்றுப்பத்து, தமிழ்மண் அறக்கட்டளை பெரியார் குடில் பி.11.குல்மொகர் குடியிருப்பு, செவாலியே சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர், சென்னை-600017. முதற்பதிப்பு-2008.*
5. *சக்திதாசன் சுப்பிரமணியன் (உ.ஆ), கலித்தொகை, தமிழ்மண் அறக்கட்டளை பெரியார் குடில் பி.11.குல்மொகர் குடியிருப்பு, செவாலியே சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர், சென்னை-600017. முதற்பதிப்பு-2008.*
6. *ந.சி.கந்தையா (உ.ஆ), அகநானூறு, தமிழ்மண் அறக்கட்டளை பெரியார் குடில் பி.11. குல்மொகர் குடியிருப்பு, செவாலியே சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர்,*

சென்னை-600017. முதற்பதிப்பு-2008.

7. சக்திதாசன் சுப்பிரமணியன் (உ.ஆ), குறுந்தொகை, தமிழ்மண் அறக்கட்டளை பெரியார் குடில் பி.11.குல்மொகர் குடியிருப்பு, செவாலியே சிவாசி கணேசன் சாலை, தியாகராயர் நகர், சென்னை-600017. முதற்பதிப்பு-2008.
8. ச.வே.சுப்பிரமணியன் (உ.ஆ), தொல்காப்பியம், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600108, ஆறாம் பதிப்பு-2013.
9. திரு.வி.கலியாணசுந்தரனார் (உ.ஆ), திருக்குறள் விரிவுரை, பூம்புகார் பதிப்பகம், 63, பிரகாசம் சாலை, சென்னை-600108, முதற்பதிப்பு-1997.

## Supplementary Bibliography

1. Avvai Su. Duraisamy Pillai (Ed.), Purananuru, Tamilmann Charitable Trust, Periyar Kudil, No. 11, Gulmohar Apartments, Chevalier Sivaji Ganesan Road, Thyagaraya Nagar, Chennai & 600017. First Edition: 2008.
2. Avvai Su. Duraisamy Pillai (Ed.), Natrinai, Tamilmann Charitable Trust, Periyar Kudil, No. 11, Gulmohar Apartments, Chevalier Sivaji Ganesan Road, Thyagaraya Nagar, Chennai & 600017. First Edition: 2008.
3. Prof. M. V. Pasupathi (Author), Semmozhi Tamil Grammar and Literary Works, Tamil University, Thanjavur. First Edition: 2010.
4. Avvai Su. Duraisamy Pillai (Ed.), Pathitrupathu, Tamilmann Charitable Trust, Periyar Kudil, No. 11, Gulmohar Apartments, Chevalier Sivaji Ganesan Road, Thyagaraya Nagar, Chennai & 600017. First Edition: 2008.
5. Sakthidasan Subramaniyan (Ed.), Kalithogai, Tamilmann Charitable Trust, Periyar Kudil, No. 11, Gulmohar Apartments, Chevalier Sivaji Ganesan Road, Thyagaraya Nagar, Chennai & 600017. First Edition: 2008.
6. N. C. Kandaiya (Ed.), Aganānuru, Tamilmann Charitable Trust, Periyar Kudil, No. 11, Gulmohar Apartments, Chevalier Sivaji Ganesan Road, Thyagaraya Nagar, Chennai & 600017. First Edition: 2008.
7. Sakthidasan Subramaniyan (Ed.), Kurunthogai, Tamilmann Charitable Trust, Periyar Kudil, No. 11, Gulmohar Apartments, Chevalier Sivaji Ganesan Road, Thyagaraya Nagar, Chennai & 600017. First Edition: 2008.
8. S. V. Subramanian (Ed.), Tolkappiyam, Manivasagar Publications, No. 31, Singer Street, Parry's Corner, Chennai & 600108. Sixth Edition: 2013.
9. Thiru. V. Kalyanasundaranar (Ed.), Thirukkural with Detailed Commentary, Poompuhar Publications, No. 63, Prakasam Road, Chennai & 600108. First Edition: 1997.